உ

சிவமயம்

கற்பக விநாயகர் துணை

திருவண்ணாமலைத் தேவார - திருவாசகம்

உண்ணாமுலை — அருணாசலம்

திருமண வெளியீடு.

விரோதிகிருது - வைகாசி - 21

4—6—1971

சுப. சித. சிதம்பரம் செட்டியார்

கோனாபட்டு.

உ

சிவமயம்

கற்பக விநாயகர் துணை

திருவண்ணமலைத் தேவார - திருவாசகம்

உண்ணுமுலை — அருணசலம்

திருமண வெளியீடு.

விரோதிகிருது - வைகாசி - 21

4—6—1971

சுப. சித. சிதம்பரம் செட்டியார்

கோனபட்டு.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



தனயன் வேண்டினும் சம்பத்து வேண்டினும்
மனையை வேண்டினும் வான்பயன் வேண்டினும்
கனைவ ளங்கொள் கணேச புரேசனை
இனிய கற்பக மூர்த்தியை ஏத்துமே.

- சொக்கலிங்க ஐயா.

உ
சிவமயம்



அருணாசலேசுவரர்



உண்ணாமுலை அம்மை

அண்ணா மலையில் அருணா சலப்பரமன்
உண்ணா முலைத்தாய்க் குறுதுணைவன்—விண்ணா
தேவர் பரவும் சிவபெருமான் சேவடிக்காள் [ளும்
ஆவ தறிவுடைமை யாம்.

- தத்புருஷ தேசிகர்.

உ

சிவமயம்

வாழ்த்துரை

தேவகோட்டை, சிவ ஸ்ரீ தத்புருஷதேசிகரவர்கள்

"வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை" இடையீடின்றி எண்ணித் துதித்து, இறைஞ்சுவது, நமதுகடமையாகும் தேவர்கோ அறியாத தேவ தேவனுக—மூவர் கோனாய் நின்ற மூர்த்தியாக விளங்கும் முதல்வன் சிவபெருமான். சிவபெருமானைப் பாடிப் பேறு பெற்றவர் பலர். அவருள், திருஞானசம்பந்த சுவாமிகள் முதல் சேக்கிழார் சுவாமிகள் வரையுள்ள திருமுறை யாசிரியர் இருபத்தெழுவரும் முன்னணியில் விளங்குபவர்கள்.

அருளாளர்களாகிய திருமுறை யாசிரியர்களின் திருப்பாடல்கள், பயன் வழங்குவதில் மந்திரங்களையும் கூட விஞ்சி

நிற்பன என்பது அநுபவமுடையவர் அறிந்த உண்மை. கண்டபெரு மந்திரங்களாகிய திருமுறைப்பாடல்களைப் பல்காலும் ஓதிப் பயனடைதல் வேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் நமது அன்புருவாகிய திரு, சுப. சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் தமது புதல்வி செல்வி இலக்குமிக்கு 24-8-67ல் நிகழ்ந்த திருமணத்தில் திருவாசக அகவல்கள் நான்கினையும் அச்சிட்டு வெளியிட்டு நல்லுதவி புரிந்தார்கள். அதைப்போல இன்று அவர்கள் புதல்வி செல்வி உண்ணுமுலைக்கு நிகழும் திருமணத்தில், திருவண்ணுமலைத் தேவாரத் திருப்பதிகம் ஒன்றையும் திருவெம்பாவைத் திருவாசகத்தையும் மணமக்களின் பெயரொற்றுமையை மனத்துட் கொண்டு அச்சிட்டு வெளியிடுகின்றூர்கள். அன்பர்கள் இவ்வருட்பாடல்களை ஓதி நற்பயன் பெறுவார்களாக.

இதனை வெளியிடுகின்ற அன்பர் சிதம்பரம் செட்டியாரவர்கள், ஸ்ரீ கற்பக

விநாயகர், வாடாமலர் மங்கை உடனுறை மருதீசப் பெருமான் திருவருளாலும் மணமக்களாகிய அருணசலம் - உண்ணமுலை, ஸ்ரீ சௌந்தர நாயகி உடனுறை தான்றேன்றி நாதர் திருவருளாலும் எண்ணிய எண்ணியாங் கெய்தி இன்புற்று வாழ வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேம்.

நலமே தழைக!

சிவமயம்
பாலருவாயர் துணை



வாழ்த்து

உண்ணு முலைநங்கை ஓதுமரு ணுசலவேள்
கண்ணும் புதல்வருடன் காசினியில்-
பெண்ணுவாள்
சேர்ந்துமகிழ் மேனிச் சிவனுர் திருவருளே
சார்ந்தினிது வாழ்க தழைத்து.

-தத்புருஷ தேசிகர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்தது

திருவண்ணுமலைத் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

உண்ணுமுலை உமையாளொடும்
உடனுகிய ஒருவன்
பெண்ணுகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணுமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே. 1

தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை
சிறு நுண்டுளி சிதற
வாமாம்பிணை அணையும்பொழில்
அண்ணுமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி
நினைவார்வினை யிலரே, 2

பீலிம்மயில் பெடையோடுறை
பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல்நிறை
சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழில்
அண்ணுமலை அண்ணல்
காலன்வலி தொலைசேவடி
தொழுவாரன புகழே. 3

உதிரும்மயிர் இடுவெண்டலை
கலனுவுல கெல்லாம்
எதிரும்பலி உணலாகவும்
எருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை இளவெண்பிறை
முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழல் அடிகட்கிடம்
அண்ணுமலை அதுவே. 4

மரவஞ்சிலை தரளம்மிகு
மணியுந்துவெள் ளருவி
அரவம்செய முரவம்படும்
அண்ணுமலை அண்ணல்
உரவஞ்சடை உலவும்புனல்
உடனுவதும் ஓரார்
குரவங்கமழ் நறுமென்குழல்
உமைபுல்குதல் குணமே 5

பெருகும்புனல் அண்ணாமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
அணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ்
சடையார்கழல் பரவி
உருகும்மனம் உடையார்தமக்
குறுநோயடை யாவே. 6

கரிகாலன குடர்கொள்வன
கழுதாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை
உதையுண்டவை உருள
எரியாடிய இறைவர்க்கிடம்
இனவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடும்
அண்ணாமலை அதுவே. 7

ஒளிறூபுலி அதளாடையன்
உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண
வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய
விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிடம்
அண்ணாமலை அதுவே. 8

விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணுமலை அண்ணல்
தளராமுலை முறுவல்லுமை
தலைவன்னடி சரணே 9

வேர்வந்துற மாசூர்தர
வெயினின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர
மறையாவரு வாரும்
ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின்
அண்ணுமலை அண்ணல்
கூர்வெண்மழுப் படையானல்ல
கழல்சேர்வது குணமே. 10

வெம்புந்திய கதிரோனெளி
விலகும்விரி சாரல்
அம்புந்திழ வெயிலெய்தவன்
அண்ணுமலை அதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ
குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே 11

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவெம்பாவை

சத்தியை வியந்தது.
திருவண்ணுமலையில் அருளியது
திருச்சிற்றம்பலம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே! வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்
தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்
நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்
தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற்
பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம்
அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர்
எம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம்
அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம்
நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக்
கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓல மிடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானே! நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்
டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்
திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர்
எம்பாவாய். 6

அன்னே! இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்
திறப்பாய்
தென்னுஎன் னுமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னுனை என் அரையன் இன்னமுதென் றெல்
லோமுஞ்
சொன்னேம்கேள் வெவ்வேருய் இன்னம்
துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா
கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினேம்
கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாரே
ஊழி முதல்வனய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்
பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழம் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப்
பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்துகுடைந்துஉன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்
போல்
செய்யா!வெண் ணீருடீ! செல்வா! சிறுமருங்குல்

மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்
தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர்
எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன் நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆரப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல்
வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான்
பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீ ராடேலோர் எம்பாவாய் 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்
போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர்
எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனுடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன் றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஒரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்
பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையற்(கு) இங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்த
கர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர்
எம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்

என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர்
எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்
பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்(கு) ஆரமுதை
நங்கள் பெருமானைப்பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர்
எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ்
சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்
போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோர்
எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல
மென்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்(று)
உரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா(து) எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்ருென்றுங்காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி(று) எமக்கேலோர்
எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம்
பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம்
பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈரும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணுத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்20

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

மாகேசுவர பூசை ஆசீர்வாதம்

முதற் பெருங்கடவுளாகிய சிவபெருமான், உயிர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுத் திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் எல்லாத் திருக்கோயில்களிலும் நாட்பூசனை, விழாப்பூசனைகள் வேதசிவாகம விதிப்படி நடந்து வரும்பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக.

ஹர ஹர

விபூதி உருத்திராக்க தாரணம், ஸ்ரீ பஞ்சாட்சர ஜெபம், வேத சிவாகம படனம் தேவாராதி திருமுறைப் பாராயணம், ஆன்மார்த்த சிவபூசையாதிய சிவ புண்ணியங்கள் நாடெங்கும் பரவியோங்கும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக.

ஹர ஹர

மாதம் மும்மழை தவறாது பெய்து, நீர் வளம், நில வளம், பயிர் வளம், முதலிய எல்லா வளங்களும் செழித்தோங்கும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக.

சிவபூசைச் செல்வர் ......,
அவர்களுக்கும், அவர்கள் துணைவி, மக்கள், உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம், சிவபக்தி, சிவனடியார் பக்தி, குருபக்தி சிவஞானம் முதலியன மென்மேலும் பெருக உண்டாகும் பொருட்டு அனுக்கிரகம் பண்ணுக,

ஹர ஹர

மாகேசுவரர்கள் எல்லோரும் திருவமுது செய்தருளுக.

ஹர - ஹர - ஹர - ஹர